# அரையாண்டுப் பொதுத் தேர்வு - 2024

♦ 

## பத்தாம் வகுப்பு

பதிவு எண் : | | | | | | |

## சமூக அறிவியல்

நேரம் : 3.00 மணி

பகுதி - அ

மதிப்பெண்கள் : 100

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 14 x 1 = 14

1. பத்தொன்பதாம் நூற்றாண்டு முடிவடையுந்தருவாயில் கிழக்கு ஆசியாவில் உதயமான வலிமை வாய்ந்த நாடு எது?
   அ) சீனா ஆ) ஜப்பான் இ) கொரியா ஈ) மங்கோலியா
2. எந்த ஆண்டில் உடன்கட்டை ஏறுதல் சதி ஒழிக்கப்பட்டது?
   அ) 1827 ஆ) 1829 இ)1826 ஈ)1927
3. வேலூர் புரட்சி எப்போது வெடித்தது?
   அ) 1805 மே 24 ஆ) 1805 ஜூலை 10 இ) 1806 ஜூலை 10 ஈ) 1806 செப்டம்பர் 10
4. கூற்று: பிரிட்டிஷ் அரசு 1857ஆம் ஆண்டின் பெரும் புரட்சியை இரும்புக்கரம் கொண்டு அடக்கியது.
   காரணம்: மையப்படுத்தப்பட்ட நிர்வாகம் இல்லாததால் கிளர்ச்சி தோல்வி கண்டது.
   அ) கூற்று மற்றும் காரணம் இரண்டுமே தவறு.
   ஆ) கூற்று தவறு காரணம் சரி.
   இ) கூற்று மற்றும் காரணம் இரண்டுமே சரி. அத்துடன் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமாகும்.
   ஈ) கூற்று மற்றும் காரணம் இரண்டுமே சரி. ஆனால் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம் இல்லை.
5. தமிழ் இசை வரலாறு குறித்த நூல் யாரால் வெளியிடப்பட்டது.
   அ) ஆபிரகாம் பண்டிதர் ஆ) உ.வே.சாமிநாதர் இ) மறைமலை அடிகள் ஈ) சுப்பிரமணியபாரதி
6. ஒரே அளவு மழை பெறும் இடங்களை இணைக்கும் கோடு _______ ஆகும்.
   அ) சம மழைக்கோடுகள் ஆ) சம அழுத்தக் கோடு இ) சம்வெப்ப கோடுகள் ஈ) அட்சக் கோடுகள்
7. சாம்பல் புரட்சி என அழைக்கப்படுவது _______.
   அ) முட்டை உற்பத்தி ஆ)மீன்கள் உற்பத்தி இ) பால் உற்பத்தி ஈ) உரங்கள்
8. கீழ்க்கண்டவற்றில் அரபிக் கடலில் கலக்கும் ஆறு எது?
   அ) பெரியார் ஆ) காவிரி இ) சிற்றார் ஈ) பவானி
9. தேசிய தொலையுணர்வு மையம் அமைந்துள்ள இடம் _______.
   அ) பெங்களூர் ஆ) சென்னை இ) புதுடெல்லி ஈ) ஹைதராபாத்
10. தென்னிந்தியாவின் நெற்களஞ்சியம் என்று அழைக்கப்படும் டெல்டா
    அ) காவிரி டெல்டா ஆ) மகாநதி டெல்டா இ) கோதாவரி டெல்டா ஈ) கிருஷ்ணா டெல்டா
11. கீழ்க்காணும் எந்த மாநிலங்கள் பொதுவான உயர் நீதிமன்றத்தைப் பெற்றுள்ளன?
    அ) தமிழ்நாடு மற்றும் ஆந்திரப்பிரதேசம் ஆ) கேரளா மற்றும் தெலுங்கானா
    இ) பஞ்சாப் மற்றும் ஹரியானா ஈ) மகாராஷ்டிரா மற்றும் குஜராத்
12. அரசியலமைப்பின் _______ வது சட்ட திருத்தம் சிறு அரசியலமைப்பு என அழைக்கப்படுகிறது
    அ) 40 ஆ) 19 இ) 21A ஈ) 42
13. நாட்டு வருமானம் அளவிடுவது
    அ) பணத்தின் மொத்தமதிப்பு ஆ) உற்பத்தியாளர் பண்டத்தின் மொத்த மதிப்பு
    இ) நுகர்வு பண்டத்தின் மொத்த மதிப்பு ஈ) பண்டங்கள் மற்றும் பணிகளின் மொத்த மதிப்பு
14. ஆசியாவின் டெட்ராய்ட் என அழைக்கப்படுவது
    அ) தூத்துக்குடி ஆ) கோயம்புத்தூர் இ) சென்னை ஈ) மதுரை

பகுதி - ஆ

II. எவையேனும் 10 வினாக்களுக்கு விடையளி. (வினா எண் 28 கட்டாய வினா) 10 x 2 = 20

15. பதுங்கு குழிப்போர்முறை குறித்து நீங்கள் அறிந்ததென்ன?
16. மூன்றாம் உலக நாடுகள் பற்றி ஒரு குறிப்பு வரைக.
17. இராமலிங்க அடிகளின் சீர்திருத்தங்கள் குறித்து சிறுகுறிப்பு வரைக .
18. வாரிசு இழப்புக் கொள்கையின் அடிப்படையில் பிரிட்டிஷ் அரசில் இணைத்துக் கொள்ளப்பட்ட பகுதிகளைப் பட்டியலிடவும்.
19. திருநெல்வேலி எழுச்சி பற்றி ஒரு குறிப்பு வரைக.
20. இந்தியாவில் உள்ள உயிர்க்கோள காப்பகங்கள் ஏதேனும் ஐந்தினை எழுதுக.

21. இந்தியாவின் தோட்டப் பயிர்களைக் குறிப்பிடுக.
22. கோயம்புத்தூர் ஏன் தென் இந்தியாவின் 'மான்செஸ்டர்' என அழைக்கப்படுகிறது?
23. பேரிடர் அபாய நேர்வு குறைப்பு - வரையறு.
24. செம்மொழித் தகுதிப்பெற்ற இந்திய மொழிகள் எவை?
25. சார்க் உறுப்பு நாடுகளைப் பட்டியலிடுக.
26. தமிழ்நாட்டிலுள்ள சில ஊட்டச்சத்து திட்டங்களின் பெயரை எழுதுக
27. தொழில் முனைவோர் என்பவர் யாவர்?
28. கட்டுப்பாடுக் கோடு- வரையறு.

பகுதி - இ

**III. எவையேனும் 10 வினாக்களுக்கு விடையளி. (வினா எண் 42 கட்டாய வினா)** **10 x 5 = 50**

29. ***கோடிட்ட இடங்களை நிரப்புக :***
    i) 1919ஆம் ஆண்டின் இந்திய அரசுச் சட்டம் மாகாணங்களில் _______ அறிமுகம் செய்தது.
    ii) முதன்முதலாக அச்சேறிய ஐரோப்பிய மொழி அல்லாத மொழி_______ ஆகும்.
    iii) _______ தமிழ்நாட்டின் மாநில விலங்கு ஆகும்.
    iv) இந்திய அரசியலமைப்பு ஏற்றுக் கொள்ளப்பட்ட நாள் மற்றும் ஆண்டு _______.
    v) GDP யின் நவீன கருத்தை முதன் முதலில் உருவாக்கியவர் _______.
30. ஜெர்மனியுடன் தொடர்புடைய வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையின் சரத்துக்களை கோடிட்டுக் காட்டுக.
31. இரண்டாம் உலகப்போரின் விளைவுகளை ஆய்வு செய்க.
32. அ) ***வேறுபடுத்துக.***
    i) மேற்கு கடற்கரைச் சமவெளி மற்றும் கிழக்கு கடற்கரைச் சமவெளி
    ii) புதுப்பிக்க இயலும் மற்றும் புதுப்பிக்க இயலா வளங்கள்.
    ஆ) ***காரணம் கூறுக:*** மலைப் பகுதிகள் சவெளிகளை விட குளிரானவை.
33. வேலூரில் 1806-ல் வெடித்த புரட்சியின் கூறுகளை விளக்குக.
34. வேளாண்மை இல்லாத உலகை கற்பனை செய்து பார்க்க முடியுமா?
35. நகரமயமாக்கம் என்றால் என்ன? அதன் சிக்கல்கள் யாவை?
36. புயலுக்கு முன்னரும் பின்னரும் மேற்கொள்ள வேண்டிய அபாய நேர்வு குறைப்பு நடவடிக்கைகளை எழுதுக.
37. இந்திய அரசியலமைப்பின் சிறப்புக் கூறுகளை விளக்குக.
38. அணி சேரா இயக்கம் பற்றி விரிவான குறிப்பு எழுதுக
39. உலகமயமாக்கலின் சவால்களை எழுதுக.
40. கருப்புபணம் என்றால் என்ன? அதற்கான காரணங்களை எழுதுக.

குறிப்பு: பார்வையற்ற மாணவர்கள் காலக்கோடு மற்றும் வரைபடத்தில் முறையே நிகழ்வுகளையும் இடங்களையும் குறிப்பிட்டு காட்டுவதற்கு பதிலாக அவற்றைப் பற்றிய குறிப்புகள் மட்டும் எழுத வேண்டும்.

41. ***கீழ்க்காண்பனவற்றிற்கு காலக்கோடு வரைக.***
    1900 முதல் 1930 வரையிலான ஆண்டுகட்கு உட்பட்ட முக்கிய ஐந்து நிகழ்வுகளை காலக்கோட்டில் எழுதுக
42. **உலக வரைபடத்தில் பின்வரும் இடங்களை குறிக்கவும்**
    1) கிரேட் பிரிட்டன் 2) மொராக்கோ 3) இத்தாலி 4) மாஸ்கோ 5) ஹவாய் தீவுகள்

பகுதி - ஈ

**IV. பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்கவும்.** **2 x 8 = 16**

43. அ) கிழக்கிந்திய கம்பெனியாரை எதிர்த்து கட்டபொம்மன் நடத்திய வீரதீரப்போர்கள் பற்றி ஒரு கட்டுரை வரைக. ***(அல்லது)***
    ஆ) சட்டமறுப்பு இயக்கத்தில் தமிழ்நாடு வகித்த பங்கினை விவரி.

குறிப்பு: பார்வையற்ற மாணவர்கள் வரைபட தொடர்புடைய வினாக்களுக்கு குறிப்புகள் மட்டும் எழுதவும்.

44. அ) ***கொடுக்கப்பட்டுள்ள இந்திய வரைபடத்தில் கீழ்க்காணும் இடங்களைக் குறிக்கவும்.***
    1) காரகோரம் 2) கங்கை 3) சோட்டாநாகபுரி பீடபூமி 4) தென்மேற்கு பருவக் காற்று வீசும் திசை
    5) அகத்தியர் மலை உயிர்க்கோளப் பெட்டகம் 6) சென்னை 7) மும்பை ஹை
    8) மின்னியல் தலைநகரம் ***(அல்லது )***
    ஆ) ***கொடுக்கப்பட்டுள்ள தமிழ்நாடு வரை படத்தில் கீழ்க்காணும் இடங்களைக் குறிக்கவும்.***
    1) வேலூர் 2) செம்பரபாக்கம் ஏரி 3) சோழமண்டல கடற்கரை 4) வண்டல் மண்
    5) பருத்தி விளையும் இடம் 6) மேட்டூர் அணை
    7) மேகமலை வனவிலங்கு சரணாலயம் 8) வைகை ஆறு.

******